தமிழ்க் கல்வி நிலையம், ஹோம்புஷ்
Tamil Study Centre, Homebush Inc.
Postal Address: P O Box 4019, Homebush NSW 2140
www.tsch.org.au info@tsch.org.au

தமிழறிவுப் போட்டி 2013

மூன்றாம் வகுப்பு

ஆரம்பப்போட்டி - 30 கேள்விகள்

முதல் சுற்று - 10 கேள்விகள்

ஒன்றுக்கு மேற்பட்ட விடைகள் தரப்பட வேண்டிய வினாக்களுக்கு அனைத்து விடைகளும் வழங்கினால் மட்டுமே சரியான விடையாகக் கருதப்படும்.

சரியான விடைக்குப் பத்துப் புள்ளிகள் வழங்கப்படும்

எல்லா விடைகளையும் தரத்தவறினால் பிழையான விடை எனக் கருதப்பட்டும்.

பிழையான விடைக்கு ஐந்து புள்ளிகள் கழிக்கப்படும்

முதற் சுற்று

10 கேள்விகள்

1. குதிரையில் சவாரி செய்யலாம்.
   நீச்சல் குளத்தில் என்ன செய்யலாம்?

1. விடை:

நீந்தலாம்

2. உமது வகுப்பாசிரியரின் பெயர் என்ன?

2. விடை:

3. முக்கனிகள் எவை?

3 விடை:

மாம்பழம், வாழைப்பழம், பலாப்பழம்

4. பொருட்களை வாங்கி விற்பவரை எப்படி அழைப்பர்?

4. விடை : வியாபாரி

6. கதை எழுதுபவரை எப்படி அழைப்பர்?

6. விடை : எழுத்தாளர்

7. இயல், இசை, நாடகம் இதனை எப்படி அழைப்பர்?

7 விடை: முத்தமிழ்

8. மூவேந்தர்கள் யார்?

8. விடை:

சேர, சோழ, பாண்டியர்

9. கவிச்சக்கரவர்த்தி யார்?

9. விடை: கம்பர்

10. உன் அம்மா எனக்கு மகள். நான் உனக்கு என்ன உறவு?

10. விடை: அம்மம்மா

முதற் சுற்று முடிவடைந்தது
இரண்டாம் சுற்று - 10 கேள்விகள்

11. விமானம் ஓட்டுபவரை எப்படி அழைப்பார்கள்?

11. விடை: விமானி

12. பாட்டுப்பாடுபவரை எப்படி அழைப்பார்கள்?

12. விடை:

பாடகர்

13. திருவள்ளுவர் எழுதிய நூலின் பெயர் என்ன ?

13. விடை: திருக்குறளை

14. ‘கவலை” இதற்கு எதிர்ச் சொல் என்ன?

14. விடை: இன்பம், குதூகலம்

15. வாழைப்பழம் வாழைமரத்தில் காய்க்கும்.

அதுபோல

திராட்சைப்பழம் எதிலே காய்க்கும்?

15. விடை :

திராட்சைக்கொடி

16. ஐம்புலன்கள்?

16. விடை: சுவை, ஒளி, ஊறு, ஓசை, நாற்றம்

17. நரம்புக் கருவிகளுள் ஒன்று. மிகவும் பழமை வாய்ந்தது

1. வீணை
2. புல்லாங்குழல்
2. மிருதங்கம்
4. மேளம்

17. விடை: வீணை

18. தமிழை வளர்த்த பெரியார்கள் இருவர் பெயர் தருக

1. ஔவையார்
2. திருவள்ளுவர்
3. கமலஹாஷன்
4. சினேகா

18. விடை :

ஔவையார், திருவள்ளுவர்,

19. இது ஒரு தோல் கருவி.
கோயில்களில் இதைக் காணலாம்

19. விடை: மேளம், மிருதங்கம்

20. ஐம்பெரும் காப்பியங்களில் ஒன்று கூறுக?

20. விடை:

சிலப்பதிகாரம்,

வளையாபதி,

குண்டலகேசி,

சீவகசிந்தாமணி.

இரண்டாம் சுற்று முடிவடைந்தது
மூன்றாம் சுற்று - 10 கேள்விகள்

21. வாழைப்பழம் இனிக்கும். அதுபோல மிளகாய்ப்பழம் என்ன செய்யும்?

21. விடை:

உறைக்கும்

22. பத்திரிகைக்குச் செய்தி சேகரித்துக் கொடுப்பவரை எப்படி அழைப்பர்.

22. விடை: நிருபர்

23. எனக்கு என்ன உறவு?

என் அப்பாவின் தங்கையின் கணவன்?

23. விடை: மாமா

24. சிலப்பதிகாரத்தை எழுதியவர் யார்?

24. விடை: இளங்கோ அடிகள்

25. சிலப்பதிகாரத்தின் கதாநாயகி யார்?

25. விடை: கண்ணகி

26. “சந்திரன்” இதற்கு வேறு சொல் என்ன?

26. விடை: திங்கள், நிலவு. அம்புலி

27. ‘எதிரி” இதற்கு எதிர்ச் சொல் என்ன?

27. விடை: நண்பன்

28. “தோல்வி” இதற்கு எதிர்ச் சொல் என்ன?

28. விடை: வெற்றி

29. இவர் யார்?

இவர் மாணவர்களுக்கு பாடம் சொல்லிக் கொடுப்பவர்.

29. விடை: ஆசிரியர்

30. இடைவெளியை நிரப்புக.

சிங்கம் வருவதைக் கண்ட மான் _____ ஓடியது.

30. விடை:

வேகமாக, பாய்ந்து, பயந்து

மூன்றாம் சுற்று நிறைவுபெற்றது

ஆரம்பப்போட்டி முடிவுற்றது

அரை இறுதிச் சுற்று - 15 கேள்விகள்

1) குழம்பியிருக்கும் இந்தச்சொல் என்ன?

ன்அபு

1. விடை: அன்பு

2. மெய் எழுத்துக்கள் எத்தனை?

2. விடை: 18

3. எண்ணாயிரத்தில் எத்தனை ஆயிரம் உண்டு?

3. விடை:

எட்டு

4. “நண்பன்” இதற்கு வேறு சொல் என்ன?

4. விடை: தோழன், சினேகிதன்

5. “அறிவாளி” இதற்கு எதிர்ச் சொல் என்ன?

5. விடை: முட்டாள்

6. ‘பொய்” இதற்கு எதிர்ச் சொல் என்ன?

6. விடை: மெய், உண்மை

7. குயில் கூவும். அதுபோல மயில் என்ன செய்யும்?

7. விடை:

அகவும்

8. என்ன உறவு?

எனக்கு அவர் அம்மம்மா. நான் அவருக்கு என்ன உறவு?

8. விடை: பேரன், பேத்தி

9. Maths என்பதன் தமிழாக்கம் என்ன?

9. விடை:

கணிதம்

10. கண்ணகி எந்த நகரை எரித்தாள்?

10. விடை மதுரையை

11. “வீடு” இதற்கு வேறு சொல் என்ன?

11. விடை: இல்லம், அகம்

12. “பள்ளிக்கூடம்” இதற்கு வேறு சொல் என்ன?

12. விடை: பாடசாலை, கல்லூரி

13. Fruit Juice என்பதன் தமிழ்ச்சொல் என்ன?

13. விடை:

பழச்சாறு

14. ஆங்கிலத்தில் April என அழைக்கப்படும் மாதம் தமிழில் எப்படிக் கூறப்படும்?

14. விடை:

சித்திரை

15. “அவன்“ ஆண்பால் என்றால்.
அவள் என்ன பால்?

15. விடை

பெண்பால்

அரை இறுதிச் சுற்று நிறைவுபெற்றது

இறுதிச் சுற்று (15 கேள்விகள்)

1. நாய் குலைக்கும்.

குதிரை .....

1. பிளிறும்
2. கனைக்கும்
3. அழும்
3. சிரிக்கும்

1. விடை: கனைக்கும்

2. சூரியன் எந்தத் திசையில் உதிக்கும்?

2. விடை:

கிழக்கில்

3. தமிழர்களின் பாரம்பரிய உடை ஒன்று கூறுக.

3. விடை:

வேட்டி, சேலை, பாவாடை

4. இந்த மாதம் வைகாசி.

அடுத்த மாதம் என்ன?

4. விடை:

ஆனி

5. சோழனின் கொடியில் உள்ளது

1. மீன் 2. புலி
2. மாடு 3. பனை

5. விடை:

புலி

6. இது காய்கறி வெட்டஉதவும். அது எது?

1. கத்தி
2. சட்டி
2. அடுப்பு
3. பானை

6. விடை: கத்தி

7. நீண்ட கழுத்துடைய மிருகம் எது?

7. விடை:

ஒட்டகச்சிவிங்கி

8. இச்சொல்லினுள் இன்னுமொரு சொல் இருக்கிறது. அது கிழமையைக் குறிக்கும். அது எது?

ஆரவாரம்

8. விடை : வாரம்

9. ஒரு சொல் மற்றவற்றில் இருந்து வேறுபடுகின்றது. அது எது?

இரு, ஓடு, நட, மாடு

9. விடை: மாடு

10. ஒரு சொல் மற்றவற்றில் இருந்து வேறுபடுகின்றது. அது எது?

தோசை, ரொட்டி, சோறு, இறைச்சி

10. விடை:

இறைச்சி

11. ஒரு சொல் மற்றவற்றில் இருந்து வேறுபடுகின்றது. அது எது?

ஆடு மாடு புலி நாய்

11. விடை:

புலி

12. வீட்டில் சமையல் செய்யும் அறையை எப்படி அழைப்பீர்?

12. விடை:

சமையலறை

13. கற்க கசடற கற்றவை கற்றபின் நிற்க ....

13. விடை: அதற்குத் தக

14. Ligt of Festival என்ற திருநாளைத் தமிழில் எப்படி அழைப்பார்?

14. விடை: தீபாவளி

15. பசுவின் இளையது கன்று.

அதுபோல

ஆட்டின் இளையது என்ன?

15. விடை:

குட்டி

இறுதிச் சுற்று நிறைவுபெற்றது

நன்றி

மேலதிக வினாக்கள் தேவைப்பட்டால்.....

1. ஒருவரைப் பாராட்டி நடாத்தும் விழா என்ன?

1. விடை:

பாராட்டுவிழா

2. எமது கல்வி நிலையம் எப்போது வெள்ளிவிழா கொண்டாடியது?

2. விடை: இந்த வருடம் (2012ம் ஆண்டு)

3. திருக்குறளை வேறு எவ்வாறு கூறுவர்?

3. விடை: முப்பாநூல், தமிழ்மறை